[1971 ஜூலை 5

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சாலைப் போக்கு வரத்து வாரியத்தின் பரிந்துரைகளில் முக்கிய அம்சங்கள் என்னென்ன ? அதை, சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டிருக் கிறார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அதற்கான விளக்கங்கள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Purchase tax on human hair

*130 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that this Government has imposed a purchase tax on the export of human hair; and

(b) whether the Government is aware of any attempts by the exporters to export human hair through other States?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின்கீழ் எந்த ஏற்றுமதிக்கும் விற்பனை வரியிலிருந்த விலக்கு உண்டு. தொடக்க நிலையில் வரி விதிக்கப் படாத மனித முடியை ஏற்றுமதி செய்பவர் ஒருவர் வாங்கி அதையே ஏற்றுமதி செய்தால், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 71எ பிரிவின்கீழ், கொள் முதல் வரி விதிக்கப்படும்.

(இ) வணிகர்கள் மனித முடியை வேறு மாநிலங்களுக்கு அனுப்பி அங்கிருந்து ஏற்றுமதி செய்த நேர்வு எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாகக் கொள்முதல் வரி எவ்வளவு விதிக்கப்படுகிறது ? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் காரணமாக அந்நியச் செலாவணி நிறையக் கிடைப்பதால், கொள்முதல் வரியிலிருந்து, விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் முன்பு படித்த விடையைச் சரியாகக் கவனித்திருந்தால், உறுப் பினர் அவர்களுக்கு விளங்கியிருக்கும். அரசியலமைப்புச் சட்டத் தின் 286-வது பிரிவின்கீழ் எல்லா ஏற்றுமதிக்கும் விற்பனை வரி யிலிருந்து விலக்கு உண்டு. தொடக்க நிலையில் வரி விதிக்கப் படாத மனித முடியை ஏற்றுமதி செய்பவர் ஒருவர் வாங்கி அதையே ஏற்றுமதி செய்தால். தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 7-எ பிரிவின்கீழ், கொள்முதல் வரி விதிக்கப்படும்.

1971 ஜூலை 5]

23—4—1971-ம் தேதியன்று உயர் நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பில்கூட வரி விதிக்க உரிமை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் கொள்முதல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படாது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பழனியில் மனித முடி ஏராளமாக இருக்கின்றது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அதை ஏற்றுமதி செய்கிறது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அரசாங்கத்திற்கு உட்பட்டதா? அல்லது பிரைவேட் கார்ப்பரேஷனா? அந்த கார்ப்பரேஷன் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கும் விற்பனை வரி போடுவதற்கும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மனித முடியிலிருந்து அழகான டோப்பாக்களை எல்லாம் அம்பத்தூரில் உள்ள 'விக் பாக்டரியில்' தயார் செய்து நல்ல விலையில் விற்கிறார்கள். இதற்கு நல்ல விலைகூடக் கிடைக்கிறது, நல்ல கிராக்கியும் இருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு வரி மூலம் என்ன வருமானம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்கிற விவரம் தற்போது இல்லை. ஆனால் 'விக் பாக்டரி' தொழிலாளர்களுடைய போராட்டத்தினால் மூடப்பட்டிருக்கிறது. அது திரும்பவும் திறக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தத் தொழிற்சாலை சீக்கிரத்தில் திறந்தால், தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும், நமக்கும் வருமானம் கிடைக்கும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மனித முடி நமது மாநிலத்தில் எங்கெங்கு கிடைக்கிறது? வருஷத்திலே எவ்வளவு கிடைக்கிறது? அதனால் பெறக்கூடிய வருமானம் எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மனித முடிக்கு எந்த நாட்டில் தேவை அதிகமாக இருக்கிறது? அதற்கான காரணம் என்ன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, காரணம், மனித முடியால் டோப்பாக்கள் செய்கிறார்கள். எந்த நாட்டில் தேவை அதிகமாக இருக்கிறது என்கிற விவரக் குறிப்பு இல்லை.